முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தான தருமமிக்க ஞான வழிகளை
   தரணியோர் பின்பற்ற வேண்டி
   ஞான குருவாக வந்த அரங்கா
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ கலை திங்கள்
   குறைவிலா சூல திகதி கதிர் வாரம்
   (பிலவ வருடம் தை மாதம் 3ம் நாள், 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் நாயன்மார்களை தொடர்ந்து
   தேசிகனுக்கு ஆழ்வார் பெருமக்களுள்
3. பெருமக்களுள் பொய்கை ஆழ்வாரும்
   புகலுவேன் துல்லிய ஆசிதனை
   வறுமை போக்கி மக்களிடை
   வளமும் வள்ளல் தன்மை குணமும்
4. குணமும் வளர்த்துக் காக்க
   குமரகுருபரன் சக்தியாக வந்து
   தினமும் அருளாசி உபதேசம்
   தெய்வ பலமாக அருளும் தேசிகா
5. தேசிகா உன் அவதாரம் மெச்சி
   தெய்வ சக்தியோடு நாங்களும்
   ஆசிதந்து உடன் இருக்கிறோம்
   அரங்கா அரங்கா என செபதபம்
6. செபதபம் கேட்க இடமெல்லாம்
   சேவைகள் அவர்கள் செயல்கள்
   அபயமென சிறக்க துணைவருகிறோம்
   அகிலத்தில் நீ செய்யவுள்ள மாற்றம்
7. மாற்றம் கண்டு மகிழ்ந்துமே
   மகா சக்தி பலம் தருகின்றோம்
   ஆற்றல்பட உன்னுள் இணைந்து
   ஆறுமுகனாக அரங்கனாக இயங்குகின்றோம்
8. இயங்கவே துல்லிய ஆசிவழி
   இதுகாலம் மக்களை சென்றடைய
   தயங்கா வரம் தருகின்றோம்
   தரணிவாழ் கலியுக மக்களே
9. மக்களே அரங்கன் ஆறுமுகன்
   மகத்துவத்தை இன்னும் அறியா
   தேக்கமான அஞ்ஞான வழியில்
   தேடல் காணா தவிக்கும் மக்களே

10. மக்களே காலம் இனி கடத்தா
மாதவசி அரங்கன் வழிக்கு
ஆக்கம்பெற நல்ல தேற்றம் பெற
அனுகி வாரீர் ஓங்காரக் குடில்நோக்கி

11. நோக்கிட பிறவிப் பயன் அடைவீர்
நோக்கிட நோக்கம் பூர்த்தி கண்டு
தேக்கமின்றி பெரும் பேறடைவீர்
தெரிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—